இருக்குவேத பஞ்ச ருத்திரங்கள்.

வேதமொழி பெயர்ப்பாசிரியர்
காசிவாசி உயர்திரு
சிவானந்த யதீந்திர சுவாமிகளவர்களால்
மொழி பெயர்க்கப்பெற்று

திருவொற்றியூரான் அடிமை என்னும்
சென்னை :
த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களால்
பதிப்பித்து

நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

1936.

காபிரைட்.] [உரிமைப் பதிவு செய்யப்பட்டது.

PRINTED AT THE
EVEREADY PRESS,
34. HUNTERS ROAD.
CHOOLAI, MADRAS.

ஓம்.

உருத்திரபரமேசுராய நமஃ.

முன்னுரை.

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், வேள்விவாயிலாக உருத்திர பரமேசுரனையே வழிபடும் முறையை விதிக்கின்றன. இந்திரன் முதலான தேவர்களின் வழிபாடும் இடையில் இடையில் காணப்படினும், உற்றுநோக்கின் அதுவும் உருத்திர பரமேசுரனது வழிபாடாகவே முடியும்.

இப்பொருளையே,

'वेदेऽस्ति संहिता रौद्री वाच्या रुद्रश्चदेवता'

என்று, மிருகேந்திர ஆகமமும் கூறுகின்றது.

இதன் விரிவை, அரதத்தாசாரியர் திருவாய் மலர்ந்தருளிய 'சுருதி சூத்தி மாலை, என்னும் நூலிற் காண்க.

வியாச சூத்திரமும் இதன்கண்ணதே கருத்துடையதாம். இதை, நீலகண்டபாடியத்திற் காண்க.

ஈண்டு, முதன்மைபற்றி இருக்குவேதமும், வேள்விக்கிரியையிற் தலைசிறந்து நின்றமைகொண்டு எசுர்வேதமும், துதியிற்சிறந்தமைபற்றிச் சாமவேதமும், போர்த்தொழிலை அறிவுறுத்தி உலகவாழ்க்கையை வளர்த்தலின் அதர்வணவேதமும் சிறந்தவைகளேயாகின்றன.

அங்ஙனமாயினும்,

यस्मिन्नृचः साम यजूꣳषि यस्मिन्प्रतिष्ठिता रथनाभौ इव आराः
यस्मिꣳश्चित्तꣳ सर्वमोतं प्रजानां तन्मे मनः शिवसंकल्पमस्तु, (எசுர்.)

என்றற்றொடக்கத்துச் சுருதிவாக்கியங்களில் இருக்குவேதமே முதலாவதாகக் காணப்படுவதாலும், ஏனைய எசுர்வேத சாமவேதங்களில் பெரும்பான்மை இருக்குவேத மந்திரங்களே காணப்படுதலானும், காலத்தை நோக்கினும் இருக்குவேதமே மிகப் பழைமையானதாமென்று அறிஞர்கள் உடன்பட்டிருத்தலானும், இருக்குவேதம் மிகச் சிறந்ததென்பது அறிஞர்கள் ஆய்ந்து அறிதற்பாலதாம்.

மற்றும் இவ் வேதங்களில், உருத்திரபரமேசுரனை நேரே கூறும் பகுதிகள் பலவிருக்கினும் எசுர்வேதத்திலுள்ள ‘ சதருத்ரீயம் ’ என்னும் பகுதியே யாவராலும் ஓதப்பெற்று வருகின்றது.

அங்ஙனமாயினும், அத்தகைய சதருத்திரி சாமவேத ருத்திரிகளின் பொருளை நோக்குமிடத்தும், பரமேசுரனது ஐம் முகத்திற்கும் ஐந்து உருத்திரங்களாக அமைந்துள்ள இயற்கைப் பெருமையை ஆராயுமிடத்தும், இருக்கு வேதத்திலுள்ள இப் பஞ்சருத்திரங்களே மிகச் சிறந்தனவாகக் காணப்படுகின்றன.

அஃதன்றியும் தெங்நாட்டில், பெரும்பான்மை எசுர்வேதிகளாகவே இருக்கின்றனர். ஆதலின், ஈண்டு, இவைகளை ஓதும் வழக்கமுங் குறைந்திருக்கின்றன. ஏனைய நாடுகளில் இவ் விருக்குவேத பஞ்ச ருத்திரங்களே மிகச் சிறந்தனவாக ஓதப்பெற்றும் வருகிஸ்றன. அது, ஆண்டு இருக்குவேதிகள் மிகுந்துள்ளாராதலி னென்க.

இந்நாட்டிலும், இருக்குவேதிகள் இப் பஞ்சருத்திரங்களைப் பெரிதும் பாராட்டி வருகின்றனர்.

மற்றெவ்வகையாலேனும் ஏனைய ருத்திரிகள் சிறப்புடையவைகளாமெனினும், ‘எண்சாண் உடம்பிற்குஞ் சிரசே பிரதானம்’ என்றவாங்கே பரமேசுரனது பஞ்சமுகங்கட்கு ஒத்தவைகளாயுள்ள இப் பஞ்சருத்திரங்களே எல்லா ருத்திரிகளினுஞ் சிறந்தன வென்பதில் ஐயமில்லை.

இவ்வாற்றால், இவற்றை, சாயணபாடிய கருத்தைத் தழுவிய பதவுரையுடன் வெளியிட்டனம். மேலும், இருக்குவேதம் வெளிவருவதற்கும் உருத்திர பரமேசுரன், எமக்கும் வெளியிடுவிப்பாருக்கும் அருள்புரிவாராக.

வேதமொழி பெயர்ப்பாசிரியர்.

கா. சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

உருத்திர பரமேசுரனது தோத்திரத் திரட்டு.

இருக்குவேதம்

அஷ்டகம்—5. வருக்கம்—30. சூக்தம்—59-ல்

பன்னிரண்டாவது மந்திரம்.

त्र्यंबकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय मामृतात् ॥

பதவுரை.

(இ-ள்.) सुगन्धि = *பரந்த புண்ணியமாகிய கீர்த்தியை யுடையவரும்,* पुष्टिवर्धनं = *உலகத்திற்குக் காரணரும்,*— उरु = *ஆற்றலுடையவரும்,*— त्र्यं-बकं = *மும்மூர்த்திகளின் பிதாவுமாகிய பரமேசுரரை,*— यजामहे = *ஆராதிக்கின்றோம். (ஆதலின் பரமேசுர! நீ),*—आमृतात् = *முத்தியடையும்வரை.*— मृत्योः = *மரணம், அல்லது, குடும்பம் என்னு மிவற்றினின்று,*— बन्धनात् = *பந்தத்தினின்றும்,*— उर्वारुकं इव = *கக்கரிப்பழம்போன்று,*— मुक्षीयं = *எம்மை, விடுவித்தருள்வாயாக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவர்களுக்குத் தந்தையும், நற்கீர்த்தியை யுடையவனும், உலக முதற்காரணனும், பேராற்றலுடையவனும், வழிபடுவோரை வளர்ப்போனுமாகிய பரமேசுரனை, வேள்வி வழியாய் ஆராதிக்கின்றோம். அவன், மரணம்வரை, எமது பந்தத்தை, கக்கரிப்பழமானது பழுத்துத் தானே விழுமாறு விடுவிப்பானாக. என்பதாம்.

இது இருக்குவேதத்தைத் தழுவிய வுரையாம். இனி, தைத்திரீயத்தைத் தழுவிய வுரை வருமாறு:—

பதவுரை.

(இ-ள்.) सुगन्धि = *திருமேனியின் நறுமணத்தை, அல்லது, புண்ணியமாகிய நறுமணத்தை உடையவனும்,*— पुष्टिवर्धनं = *உடலை, அல்லது, தனமுதலியவைகளை வளர்ப்பவனுமாகிய,*—त्र्यंबकं = *திரியம்பக (முக்கண்ணனாகிய) பரமேசுரனை,*— यजामहे = *ஆராதிக்கின்றேன். (ஆதலின் யான்),*— उर्वारुकं इव = *கக்கரிப்பழம் தானே பழுத்து விடுபடுவதுபோல்,*— मृत्योः बन्धनात् = *குடும்ப பந்தத்தினின்று,*— मुक्षीय = *விடுபடுவேனாக.*— अमृतात् = *நித்தியமாகிய சுவர்க்கத்திலிருந்து,*— मा मुक्षीय = *நீங்கமாட்டேனாக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

நறுமணத்தை யுடையவனும், தேகம், தனம் முதலானவைகளை வளர்ப் பவனுமாகிய திரியம்பகேசுர பரமசிவனைப் பூசிக்கின்றேன். ஆதலின் அவ னது அருளால் சம்சாரத்தினின்றும் விடுபடுவேன். சுவர்க்கத்திலிருந்து நீங்க மாட்டேன் என்பதாம். ஈண்டு, "பூத்த மரத்தினின்று வெளியில் பூவின் நறு மணம் பரவுமாறு, புண்ணியமாகிய நறு நாற்றம் பரமேசுரனுடைய திருமேனியி லிருந்து வெகு தூரத்திற் கமழ்கின்றது" என்பது சுருதி.

இது, விவாஹத்தினும் ஓதப்படுகின்றது. மற்றும், இம் மந்திரம் சுக்கில எசுர்வேதத்திலுமுள்ளது. பன்மை—சிறப்பு அது வருமாறு :—

சுக்ல எசுர்வேதத்திலுள்ள மூன்றும் அத்தியாயத்தின்

ஆறவது மந்திரம்.

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।

उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय माऽमृतात् ॥

ஆண்மக்கள் வழிபடல்.

(உவட்டர் உரை)

தெய்வ மணங்கமழ்வோனும், தனம் தானிய முதலானவைகளை வலி யுறுத்துகின்றவனுமாகிய முக்கண்ணனை ஆராதிக்கின்றேன். அப் பரமேசு ரன், இனிது பழுத்த வெள்ளரிப்பழம், காம்பிலிருந்து விடுபடுவதுபோன்று, எம்மைப் பந்தத்தினின்றும் விடுவிப்பானாக. இவ்வாறே மிருத்துவினின்றும் நீக்குவானாக. மற்றும், எம்மை அமுதத்திலிருந்து (முத்தியிலிருந்து) ஒரு காலும் விடுவிக்காதவனாகுக என்பதாம்.

வேள்வித்தலைவனது புத்திரி வழிபடும் வகை.

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पतिवेदनम् ।

उर्वारुकमिवबन्धनादितो मुक्षीयमामुतः ॥

தெய்வமணங் கமழ்வோனும், கொழுநனை யுணர்கின்றோனும், அதாவது கொழுநனை யடைவிப்போனு மாகிய முக்கண்ணனை (பரமேசுரனை) ஆராதிக் கின்றேன், அப் பரமேசுரன் அச் சுற்றத்தார்க ளிடத்திலிருந்து, பழுத்த பழம் விடுபடுவது போன்று என்னை விடுவிப்பானாக. கொழுநனுடைய வருக் கங்களிலிருந்து விடுவிக்காதவனாகுக என்பதாம்.

(மகீதரர் உரை)

பிதுரு மேதத்தில் புத்திரன் முதலான ஆண்மக்கள் தமது இடது துடைகளைத் தட்டிக்கொண்டு மும்முறை அக்கினியை அப்பிரதக்ஷிணம் வரு

வது போல், தேவாராதனையில், புருடர்கள், முன் மந்திரத்தால் வலது துண்டையைத் தட்டிக்கொண்டு, அப்பிரதக்ஷிணமும், பிரதக்ஷிணமுஞ் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றது காத்தியாயன சூத்திரம்.

மக்களின் தன்மையின்றிய, அதாவது தெய்வத்தன்மை கமழ்கின்றவனும், தனம் தானியம் முதலானவற்றை வளர்ப்பவனுமாகிய முக்கண்களையுடைய பரமேசுரனை ஆராதிக்கின்றோம். அவனருளால், பழுத்த பழம்போல், அவமிருத்துவினின்றும், மற்றும், பந்தத்தினின்றும் விடுபடுவோமாக. முத்தியிலிருந்து நழுவாதவர்களுமாவோமாக என்பதாம்.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய ஆரண்யகம்

பத்தாம் பிரபாடகம்

நாராயண வுபநிடதத்தில் இருபத்திரண்டாம் அநுவாகம்.

மந்திரம்

नमो हिरण्यबाहवे हिरण्यवर्णाय हिरण्यरूपाय हिरण्यपतये,
अम्बिकापतय उमापतये पशुपतये नमो नमः.

அ-து. நமோஹிரண்ய பாஹவே ஹிரண்ய வர்ணாய ஹிரண்யரூபாய [ஹிரண்யபதயே
அம்பிகாபதய உமாபதயே பசுபதயே நமோநமஃ. என்பது.

23-வது அநுவாகம்

ऋतं॑ सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम् ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमो नमः ॥

அ-து. ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்கலம்,
ஊர்த்வ ரேதம் விரூபாக்ஷம் விச்வ ரூபாய வை நமோநமஃ, என்பது.

24-வது அநுவாகம்

सर्वो वै रुद्रस्तस्मै रुद्राय नमो अस्तु ।
पुरुषो वै रुद्रः सन्महो नमो नमः ॥
विश्वं भूतं भुवनं चित्रं बहुधा जातं जायमानं च यत् ।
सर्वो ह्येष रुद्रस्तस्मै रुद्राय नमो अस्तु ॥

அ-து. ஸர்வோ வை ருத்ரஃ தஸ்மை ருத்ராய நமோ அஸ்து.
புருஷோவை ருத்ரஃ சன் மஹோ நமோ நமஃ.

விஶ்வம் பூதம் புவனம் சித்ரம் பஹுதா ஜாதம் ஜாயமானம் ச யத்,
ஸர்வோ ஹ்யேஷ ருத்ரः தஸ்மை ருத்ராய நமோ நமः, என்பது.

உருத்திர காயத்திரி

तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि तन्नोरुद्रः प्रचोदयात् ॥

ईशानः सर्वविद्यानां ईश्वरः सर्वभूतानां ब्रह्माधिपतिः ब्रह्मणोऽधिपतिः ब्रह्मा शिवो मे अस्तु सदाशिवोम्.

தத்புருஷாய வித்மஹே மஹா தேவாய தீமஹி தந் நோ ருத்ர ப்ர சோதயாத், என்பது.

ஈ ஶாநः ஸர்வ வித்யாநாம் ஈஶ்வரः ஸர்வ பூதாநாம் ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிः ப்ரஹ்மா சிவோ மே அஸ்து ஸதா ஶிவோம்.

உருத்திர இரகசியோபநிடதம்

धर्मो रुद्रो जगद्विष्णुः सर्वज्ञानं पितामहः ।
श्री रुद्र रुद्र रुद्रेति यस्तं ब्रूयाद्विचक्षणः ॥

அ-து. தர்மோ ருத்ரோ ஜகத்விஷ்ணுः ஸர்வ ஞானம் பிதாமஹः,
ஸ்ரீ ருத்ர ருத்ர ருத்ரேதி யஸ்தம் ப்ரூயாத் விசக்ஷணः என்பது.

कीर्तनात्सर्वदेवस्य सर्वपापैः प्रमुच्यते ।
रुद्रो नर उमा नारी तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. கீர்தனாத் ஸர்வ தேவஸ்ய ஸர்வ பாபைः ப்ரமுச்யதே
ருத்ரோ நர உமா நாரீ தஸ்மை தஸ்யை நமோநமः

உருத்திரனே எல்லாவடிவ னெனல்

रुद्रो ब्रह्मा उमा वाणी तस्मै तस्यै नमो नमः ।
रुद्रो विष्णुरुमा लक्ष्मीस्तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. ருத்ரோ ப்ரஹ்மா உமா வாணீ தஸ்மை தஸ்யை நமோநமः
ருத்ரோ விஷ்ணுருமா லக்ஷ்மீஸ்தஸ்மை தஸ்யை நமோநமः

रुद्रः सूर्य उमा छाया तस्मै तस्यै नमो नमः ।
रुद्रः सोम उमा तारा तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. ருத்ரः ஸூர்ய உமா ச்சாயா தஸ்மை தஸ்யை நமோநமः
ருத்ரः சோம உமா தாரா தஸ்மை தஸ்யை நமோநமः

रुद्रो दिवा उमा रात्रिस्तस्मै तस्यै नमो नमः ।
रुद्रो यज्ञ उमा वेदिस्तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. ருத்ரோ திவா உமா ராத்ரிः தஸ்மை தஸ்யை நமோநமः
ருத்ரோ யக்ஞ உமா வேதிः தஸ்மை தஸ்யை நமோநமः.

रुद्रो वह्निः उमा स्वाहा तस्मै तस्यै नमो नमः ।
रुद्रो वेद उमा शास्त्रं तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. ருத்ரோ வஹ்நிः உமா ஸ்வாஹா தஸ்மை தஸ்யை நமோநமः
ருத்ரோ வேத உமா ஶாஸ்த்ரம் தஸ்மை தஸ்யை நமோநமः

रुद्रो वृक्ष उमा वल्ली तस्मै तस्यै नमो नमः ।
रुद्रो गन्ध उमा पुष्पं तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. ருத்ரோ வ்ருக்ஷ உமா வல்லீ தஸ்மை தஸ்யை நமோநமः
ருத்ரோ கந்த உமா புஷ்பம் தஸ்மை தஸ்யை நமோநமः

रुद्रोऽर्थ अक्षरः सा उमा तस्मै तस्यै नमो नमः ।
रुद्रो लिङ्गं उमा पीठं तस्मै तस्यै नमो नमः ॥

அ-து. ருத்ரோ அர்த்த அட்சரः ஸா உமா தஸ்மை தஸ்யை நமோநமः
ருத்ரோ லிங்கம் உமா பீடம் தஸ்மை தஸ்யை நமோநமः

सर्वदेवात्मकं रुद्रं नमस्कुर्यात् पृथक् पृथक् ।
एभिर्मन्त्रपदैरेव नमस्यामीश पार्वती ॥

அ-து. ஸர்வ தேவாத்மகம் ருத்ரம் நமஸ் குர்யாத் ப்ருதக் ப்ருதக்.
ஏபிர் மந்த்ரபதை ரேவ நமஸ்யாமீஶ பார்வதீ.

சிவ விஷ்ணு அபேதம்

सर्व देवात्मको रुद्रः सर्वे देवाः शिवात्मकाः ।
रुद्रस्य दक्षिणेपार्श्वे रविर्ब्रह्मा त्रयोऽग्नयः ॥
वामपार्श्वे उमादेवी विष्णुः सोमोपि ते त्रयः ।
या उमा सा स्वयं विष्णुर्यो विष्णुः सहि चन्द्रमाः ॥

அ-து. ஸர்வ தேவாத்மகோ ருத்ரः ஸர்வேதேவாः ஶிவாத்மகாः
ருத்ரஸ்ய தக்ஷிணே பார்ஶ்வே ரவிர் ப்ரஹ்மா த்ரயோக்னயः

வாம பார்ஶ்வே உமா தேவி விஷ்ணுஃ சோமோபபிதே த்ரயஃ
யா உமா ஸா ஶ்வயம் விஷ்ணுர் யோ விஷ்ணுஃ ஸ ஹரி சந்த்ரமாஃ

उमा शंकरयोर्योगः संयोगा विष्णुरुच्यते ।
यस्तु तस्मै नमस्कारं कुर्याद्भक्तिसमान्वितः ॥

அ-து, உமா ஶங்கர யோர் யோகஃ ஸம்யோகம் விஷ்ணுருச்யதே
யஸ்து தஸ்மை நமஸ்காரம் குர்யாத் பக்தி ஸமன்விதஃ

சாயோப நிஷத்

यो ब्रह्मणः पञ्चवक्त्रहन्ता तस्मै रुद्राय नमो अस्तु ।
यो विस्फुलिङ्गेन ललाटजेन सर्वं जगद्भस्मसात्करोति ।
पुनश्च सृष्ट्वा पनरप्यरक्षदेवं स्वतन्त्रं प्रकटीकरोति ।
तस्मै रुद्राय नमोऽस्तु ॥

அ-து. யோ ப்ரஹ்மணஃ பஞ்ச வக்த்ர ஹந்தா தஸ்மை ருத்ராய நமோ அஸ்து, யோ விஸ்புலிங்கேன லலாட ஜேன ஸர்வம் ஜகத் பஸ்ம ஸாத்கரோதி. புனஶ்ச ஸ்ருஷ்ட்வா புனரப் யரக்ஷதேவம் ஸ்வதந்த்ரம் ப்ரகடீகரோதி. தஸ்மை ருத்ராய நமோ அஸ்து.

यो वामपादेन जघानकालं घोरं पपेथ हालाहलं दहन्तं ।
दक्षाङ्घ्रिनापस्मृति मुग्रवीर्यं तस्मै रुद्राय नमो अस्तु ॥

அ-து. யோ வாம பாதேன ஜகான காலம் கோரம் பபேத ஹாலாஹலம் தஹந் தம், தக்ஷாங்க்ரி நாபஸ்ம்ருதி முக்ர வீர்யம் தஸ்மை ருத்ராய நமோ அஸ்து.

यो वाम पादार्चितविष्णुनेत्रस्तस्मै ददौ चक्रमतीवहृष्टः ।
तस्मै रुद्राय नमो अस्तु ॥

அ-து. யோ வாமபாதார்சித விஷ்ணு நேத்ரஃ தஸ்மை ததௌ சக்ரமதீவ ஹ்ருஷ்டஃ, தஸ்மை ருத்ராய நமோ அஸ்து.

यो दक्षयज्ञे सुरसङ्घान् विजित्य विष्णुं बबन्धोऽरगपाशेन वीरः,
तस्मै रुद्राय नमो अस्तु ॥

அ-து. யோதக்ஷ யக்ஞே ஸுரஸங்கான் விஜித்ய விஷ்ணும் பபந்தோரக பாஶேன வீரஃ, தஸ்மை ருத்ராய நமோ அஸ்து.

முற்றிற்று.

இருக்குவேத பஞ்ச ருத்திரங்கள்

அஷ்டகம்—1. வருக்கம்—26. சூக்தம்—43-ல்
முதலாவது இருக்கு.

இருக்கு 1.

कद्रुद्राय प्रचेतसे * मीढुष्टमाय तव्यसे ।

वोचेम शन्तमं हृदे ॥ १ ॥

பதவுரை.

(இ-ள்.) प्रचेतसे = முற்றுணர்வோனும்,— मीढुष्टमाय = எல்லாநலங்களேயும் இனிது அளிக்கின்றவனும்,—तव्यसे = மிகப் பெரியோனும்,—हृदे = உள்ளத்தில் இருக்கின்றவனுமாகிய,—रुद्राय = உருத்திர பரமேசுரன் பொருட்டு,—शन्तमं = மிகுந்த பிரியத்தைக் கொடுக்குந் துதியை,—कत् = எப்போது,—वोचेम = சொல்லுவோம்? எ-று.

சாயணபாடியக் கருத்து

எல்லா முணர்கின்றவனும், வேண்டியவற்றை அருள்கின்றவனும், நெஞ்சில் நீங்காதிருக்கின்றவனுமாகிய உருத்திர மகாதேவனே, யாம் எப்போது அழகிய துதிகளால் துதிப்போமோ? என்பதாம்.

இருக்கு 2.

यथा नो अदितिः करत्पश्वे नृभ्यो यथा गवे ।

यथा तोकाय रुद्रियम् ॥ २ ॥

பதவுரை.

(இ-ள்.) अदितिः = பூமி,— नः = எங்கட்கு,— यथा = எவ்வாறு,— रुद्रियं = உருத்திர சம்பந்தமாகிய மருந்தைச் செய்யவேண்டுமோ,— करत् = அவ்வாறே செய்வதாகுக.—पश्वे = மற்றும், எருமைக்கும்,—नृभ्यः = மக்கட்கும்,—गवे =

* मीढ्ढुष्टमाय, என்பது பாடபேதம்.

கோவிற்கும்,—यथा = எவ்வாறு செய்யவேண்டுமோ, அவ்வாறே,—(करत्) = செய்க.— तोकाय = புத்திரனுக்கு — यथा = எவ்வாறு செய்யவேண்டுமோ, (करत्) = (அவ்வாறே) செய்க. எ-று.

சாயணபாடியக் கருத்து.

மருந்துக்க ளனைத்தும், உருத்திர பரமேசுரனது சம்பந்தமுடையவை களா மாதலின், பூமிதேவியார், எமது விலங்குகட்கும், கோக்கட்கும், பசுக்கட்கும், புத்திரர்கட்கும், அவ் வுருத்திரனுடைய மருந்தை உள்ளவாறே செய் தருள்வாராக என்பதாம்.

இருக்கு 3.

यथा नो मित्रो वरुणो यथा रुद्रश्चिकेतति ।
यथा विश्वे सजोषसः ॥ ३ ॥

பதவுரை.

(இ-ள்.) मित्रः = மித்திரனும்.— वरुणः = வருணனும்,—यथा = எவ்வண்ணமாக,—नः = எங்கட்கு அறிவை யுண்டாக்குவார்களோ, அவ்வாறு செய்வார்களாக.—रुद्रः = உருத்திரன்,—यथा = எவ்வாறு,—चिकेतति = எமக்கு அறிவுறுத்துவானோ, அவ்வாறு செய்வானாக.—सजोषसः = ஒத்த பிரியமுடைய,—विश्वे = எல்லாத் தேவர்களும்,—यथा = எவ்வாறு,—चिकेत(ति) न्ति, = அறிவுறுத்துவார்க அவ்வாறே யறிவுறுத்துவார்களாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

மித்திரன், (சூரியன்) வருணன், உருத்திரன், சமான விருப்பமுடையவர் களான விசுவதேவர்கள், எமக்கு உள்ளவாறு அறிவை யுண்டாக்குவார்களாக என்பதாம்.

இருக்கு 4.

गाथपतिं मेधपतिं रुद्रं जलाषभेषजम् ।
तच्छंयोः सुम्नमीमहे ॥ ४ ॥

பதவுரை.

(இ-ள்.) गाथपतिं = துதியைப் பாதுகாக்கின்றவனும்,— मेधपतिं = வேள்வியைப் பரிபாலிக்கின்றவனும், जलाषभेषजं = தண்ணீராகிய மருந்தோடு கூடியிருக்கின்றவனுமாகிய,—रुद्रं = உருத்திர பரமேசுரனைக் குறித்து,—शंयोः =

பிருகற்பதியின் புத்திர சம்பந்திகளான எல்லா மக்களையும் முன்னிட்டு, तत् = *அத்தகைய,*—सुम्नं = *மங்களத்தை,*—ईमहे = *யாம் வேண்டிபிரக்கின்றோம்.* எ-று.

சாயணபாடியக் கருத்து

பிருகற்பதியின் புத்திரனுடைய சம்பந்தமாயுள்ள மக்களனைவருக்கும், பேரின்பத்தை யளிக்குமாறு, துதியாளரைப் பாதுகாக்கின்றவனும், யாகத்தைப் பரிபாலிக்கின்றவனுமாகிய உருத்திர பரமேசுரனை வேண்டுகின்றோம். என்பதாம்.

இருக்கு 5.

यः शुक्र इव सूर्यो हिरण्यमिव रोचते ।

श्रेष्ठो देवानां वसुः ॥ ५ ॥

பதவுரை.

(இ-ள்.) यः = *எவன்,*—सूर्यः इव = *சூரியனைப்போல்,*—शुक्रः = *பிரகாசிக்கின்றானே,*—हिरण्यं इव = *பொன்னைப்போல்,*—रोचते = *பிரியனோ,*—देवानां = *தேவர்களுக்குள்,*—श्रेष्ठः = *சிறப்புற்றவனோ,*—वसुः = *வாழ்வதற்குக் காரணனோ, அவனே உருத்திர பரமேசுரன்.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுரன், இரவிபோன்று விளங்குகின்றவனும், பொன்னைப்போல் எல்லா வுயிர்கட்குப் பிரியனும், தேவர்களுக்குட் சிறந்தவனும், வசிப்பதற்குக் காரணனுமாயிருக்கின்றான் என்பதாம்.

இருக்கு 6.

शं नः करत्यर्वते सुगं मेषाय मेष्ये ।

नृभ्यो नारिभ्यो गवे ॥ ६ ॥

பதவுரை.

(இ-ள்.) नः = *எமது,*—अर्वते = *குதிரைக்கும்,*—मेषाय = *எருமைக்கடாவிற்கும்,*—मेष्ये = *எருமைக்கும்,*—नृभ्यः = *ஆண் மக்கட்கும்,*—नारिभ्यः = *பெண் மக்கட்கும்,*—गवे = *பசுவிற்கும்,*—सुगं शं = *நல்ல சுகத்தை,*—करति = (*உருத்திரனே*) *செய்கின்றான்.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

எம்முடைய, குதிரை, எருமை, எருமைக்கடா, ஆண் மக்கள், பெண் மக்கள், கோ என்பவைகட்கு, உருத்திர தேவனே இன்பை யளிக்கின்றான் என்பதாம்.

இருக்கு 7.

अस्मे सोम श्रियमधि निधेहि शतस्य नृणाम् ।
महि श्रवस्तुविनृम्णम् ॥ ७ ॥

பதவுரை.

(இ-ள்.) सोम ! = சோமனே ! நீ,—नृणां = மக்களுக்கு,— शतस्य = போதிய, श्रियं = செல்வத்தை,— अस्मे = எம்மிடத்து,— अधिनिधेहि = நன்கு நிலைக்கவைப்பாயாக.—तुवि नृम्णं = வன்மை மிகுந்தவைகளும்,—महि श्रव: = நிறைந்தவைகளுமான உணவுப்பொருள்களையும்,–(अधिनिधेहि) = எம்மிடத்து நிலைக்கவைப்பாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

சோம! நீ, எங்கட்கு வேண்டிய செல்வத்தையும், உணவுப் பொருள்களையும் எம்மிடத்தில் எப்போதும் இருக்கும்படி செய்தருள்வாயாக. என்பதாம்.

இருக்கு 8.

मा नः सोमपरिबाधो मारातयो जुहुरन्त ।
आ न इन्दो वाजे भज ॥ ८ ॥

பதவுரை.

(இ-ள்.) सोमपरिबाध: = வேள்வியைச் செய்யாமைகள்,—न: = எம்மைத், मा जुहुरन्त = துன்புறுத்தாதவைகளாகுக.—अरातय: = (மற்றும்) பகைவர்கள் (எம்மை),—मा (जुहुरन्त) = துன்புறுத்தாதவர்களாகுக.—इन्दो ! = சோமனே ! நீ न: = எமக்கு,— वाजे = ஆற்றலை, அல்லது, உணவுப் பொருளை,—आभज = மிகுதியாய் அளித்தருள்வாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

வேள்வியைச் செய்யவில்லையே என்னும் குற்றங்களும், பகைகளும், எம்மைத் துன்புறுத்தாதொழிக. எமக்கு, ஆற்றலை, அல்லது, உணவுப் பொருள்களை நிறையக் கொடுத்தருள்வாயாக என்பதாம்.

இருக்கு ௧.

यास्ते॑ प्रजा अ॒मृत॑स्य॒ पर॑स्मि॒न्धाम॑न्नृ॒तस्य॑ ।

मू॒र्धा नाभा॑ सोम वेन आ॒भूष॑न्तीः सोम वेदः ॥ ९ ॥

பதவுரை.

(இ-ள்.) सोम ! = சோமனே !— अमृतस्य = கேடிலாதவனும்,— परस्मिन् धामन् ऋतस्य = மேலாகிய இடத்தில் அடையத்தக்கவனுமாகிய நீ,-मूर्धा = சிரசுபோன்ற (தலைமையாகிய)—नाभा = வேள்வியின்கண்,-याः = எவர்கள் இருக்கின்றார்களோ, ते प्रजाः = அம் மக்களை,— वेनः = விரும்புவாயாக.— सोम ! = சோமனே ! நீ, आभूषन्तीः = எல்லாவகையாலும் வேள்வியை அலங்கரிக்கின்றவர்களை,— वेदः = அறிந்துகொள்ளுவாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

சாந்தமாகிய உருத்திரபரமேசுரனே! அதாவது வேள்விக்கரசே! நீ, தலைமையாகிய வேள்வியின்கண், அணியுற்றிருக்கின்ற மக்களிடத்து அன்புவைத்தருள்வாயாக. மற்றும், அவர்களைத் தெரிந்துகொண்டருளுவாயாக என்பதாம்.

இருபத்தேழாம் வருக்கம் முதலாம் மண்டலம்

எட்டாம் அனுவாகம் முற்றிற்று.

முதலாம் உருத்திரம் முடிந்தது.

அஷ்டகம்—1. *வருக்கம்*—4. **சூக்தம்**—114-ல்

இருக்கு 1.

इ॒मा रु॒द्राय॑ त॒वसे॑ कप॒र्दिने॑ क्ष॒यद्वी॑राय॒ प्र भ॑रामहे म॒तीः ।

यथा॒ शम॑स॒द्द्वि॒पदे॒ चतु॑ष्पदे॒ विश्वं॑ पु॒ष्टं ग्रामे॑ अ॒स्मिन्न॑नातु॒रम् ॥ १ ॥

பதவுரை.

(இ-ள்.) तवसे = பெரியோனும்,— कपर्दिने = கற்றைச் சடையையுடையவனும்,—क्षयद्वीराय = வீரர்கள் ஒடுங்குதற்கு இடமானவனும், அல்லது, பெருஞ்செல்வர்களாய் வீரமுற்ற மருத்துக் கணங்களைப் புத்திரர்களாக உடையவனுமாகிய,—रुद्राय = உருத்திர மகாதேவனின் பொருட்டு,—द्विपदे = எமது மக்க

ளுக்கும்,—चतुष्पदे = எமது கோ முதலானவைகட்கும்,— यथा शं असत् = உரோகங்கள் சாந்தியாய் நலமாகும் வண்ணம்,— इमाः मतीः = அழகிய இத் தோத்திரங்களை,— प्रभरामहे = நன்கு செய்கின்றோம்.— अस्मिन् ग्रामे = (ஆதலின்) இக் கிராமத்தில்,— विश्वं = அனைத்தும்,— अनातुरं = பிணிகளற்றவைகளாய்,— पुष्टं = இனிது வளர்வனவாகுக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

எமது கிராமத்திலுள்ள, பசு, எருமை முதலான மிருகங்களும், எமது மக்களும், பிணியிலாதவர்களாய் வளரவேண்டுமென்று உருத்திரனை இனிது துதிக்கின்றோம் என்பதாம்.

இருக்கு 2.

मृळा नो रुद्रोत नो मयस्कृधि क्षयद्वीराय नमसा विधेम ते ।

यच्छं च योश्च मनुरायेजे पिता तदश्याम तव रुद्र प्रणीतिषु ॥ २ ॥

பதவுரை.

(இ-ள்.) रुद्र ! = உருத்திர பரமேசுர ! நீ,— नः = எங்கட்கு,— मृळ = சுகத்தை யளித்தருள்கின்றவனுகுவை.— उत = மற்றும்,— नः = எங்கட்கு, मयः = இன்பை,— कृधि = செய்தருள்வாயாக.— क्षयद्वीराय = எல்லா வீரர்களையும் வென்ற, அல்லது, செல்வமிருந்த வீரர்களான மருத்துக்களோடுகூடிய, ते = உன்னை,— नमसा = அவியாகிய அன்னத்தால், அல்லது, வணக்கத்தால், विधेम = வழிபடுகின்றோம்.— पिता मनुः = உண்டாக்கிய மநுவானவர் (எமது மக்களின் பொருட்டு),–यत् शं च = எந்தப்பிணியின்மையையும்,—योः च = பயநிவிருத்தியையும்,— आयेजे = தேவர்களிடத்திலிருந்து கொண்டுவந்து தந்தனரோ,— तत् = அவற்றை,— रुद्र ! = உருத்திரபரமேசுர !— तव = உனது, प्रनीतिषु = கடைக்கண் நோக்குக ளிருக்குமிடத்து,— अश्याम = யாம் அடைவோம். எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! நீ, எமக்குச் சுகமளிப்போனுயிருந்து இன்பையே யளிப்பாயாக. உன்னை, அவியால் (தேவ வுணவால்) வழிபடுகின்றோம். எம்மை யுண்டாக்கியவர், எம் பொருட்டு, தேவர்களிடத்திலிந்து கொண்டுவந்து தந்தருளிய, பிணியிலாமை, பயமின்மை யிரண்டையும், உனது அருணேக்கிருக்கில் யாம் அடைந்து கொள்ளுவோம் என்பதாம்.

இருக்கு 3.

अश्याम ते सुमतिं देवयज्यया क्षयद्वीरस्य तव रुद्र मीढ्वः ।

सुम्नायं निद्विशो अस्माकमा चरारिष्टवीरा जुहवाम ते हविः ॥ ३ ॥

பதவுரை.

(இ-ள்.) मीढ्वः = வேண்டியவற்றை வழங்கும்,-रुद्र ! = உருத்திர பரமேசுர ! क्षयद्वीरस्य = வீரர்களை வென்ற, அல்லது, வீரமான மருத்துக்களை யுடைய, तव = உனது,— सुमतिं = அநுக்கிரகத்தை,—ते = உன்னைப்பற்றிய யாங்கள், देवयज्यया = தேவாராதனையால்,— अश्याम = அடைவோமாக.— अस्माकं = எமது, विशः = பிரசைகளைக் குறித்து,— सुम्नायन् इत् = சுகத்தைக் கொடுக்கின்றவனே யாகி,— आचर = வருவாயாக.— अरिष्टवीराः = துன்புறுத்தப்படாத பிரசைகளை யுடையவர்களான நாங்கள்,— ते = உனக்கு,— हविः = பொங்கல் அப்பம் முதலான அவிகளை,— जुहवाम = ஆகுதி செய்வோமாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

வேண்டுவனவற்றை அநுக்கிரகஞ் செய்யும் உருத்திர பரமேசுர! நீ, எமக்கு அருள் செய்வாயாக. எம்மைச் சேர்ந்தவர்களுக்குச் சுகத்தைக் கொடுப்பாயாக. உனக்கு, யாம் ஆகுதி செய்கின்றோம். என்பதாம்.

இருக்கு 4.

त्वेषं वयं रुद्रं यज्ञसाधं वंकुं कविमवसे निह्वयामहे ।

आरे अस्मद्दैव्यं हेळो अस्यतु सुमतिमिद्वयमस्या वृणीमहे ॥ ४ ॥

பதவுரை.

(இ-ள்.) त्वेषं = ஒளிர்கின்றவனும்,— यज्ञसाधं = வேள்வியை முடிக்கின்றவனும்,—वंकुं = வளைந்த போக்கையுடையவனும்,—कविं = பேரறிவை யுடையவனுமாகிய,—रुद्रं = உருத்திர பரமேசுரனை,— वयं = யாம்,— अंवसे निह्वयामहे = இனிது அழைக்கின்றோம்.—दैव्यं = தேவ சம்பந்தியாகிய,—हेळः = முனிவை, अस्मत् आरे = எம்மினின்று வெகுதூரத்தில்,—अस्यतु = எவுவாயாக (நீக்கியருள்வாயாக.)— अस्य = இம் மகாதேவனுடைய,—सुमतिमित् = அருளையே,— आवृणीमहे = வேண்டுகின்றோம். எ-று.

சாயணபாடியக் கருத்து.

பல்வகை நற்குணங்களோடு கூடிய உருத்திர பரமேசுரனை, யாம் அழைக்கின்றோம். அவன், எம்மிடத்தில் முனிவையடையாதவனாகுக. அவனது அருளையே போற்றுகின்றோம் என்பதாம்.

இருக்கு 5.

दिवो वराहमरुषं कपर्दिनं त्वेषं रूपं नमसा नि ह्वयामहे ।

हस्ते बिभ्रद्भेषजा वार्याणि शर्मवर्मच्छर्दिरस्मभ्यं यंसत् ॥ ५ ॥

பதவுரை.

(இ-ள்.) वराहं = சிறந்த உணவை, அல்லது, ஆற்றலை உடையவனு அरुषं = விளக்கமுடையவனும்,—कपर्दिनं = சடையை யுடையவனும்,— சோதி வடிவனும்,—रूपं = மறைமுடிகளா லறியப்படுவோனுமாகிய உ பரமேசுரனை,—नमसा = அவியால், அல்லது, வணக்கத்தால்,—दिव:— வி லிருந்து (வருமாறு)—निह्वयामहे = இனிது அழைக்கின்றோம்.—हस्ते = வுருத்திர பரமேசுரன், தனது திருக்கரத்தில்,—वार्याणि = அனைவரும் வதும்,— भेषजा = பிணி நீக்குதற்குரியவைகளுமானவற்றைக் கையிற்கொ னாய் வந்து,—अस्मभ्यम् = எமக்கு,—शर्म = பிணியின்மையாகிய ஆரோக்கிய யும்,—वर्म = கவசத்தையும்,— छर्दि: = வீட்டையும்,— यंसत् = அளித்தரு ளுக; எ-று.

சாயணபாடியக் கருத்து.

சோதியும் சுடருமாகியவனும், மறைமுடியில் மன்னுகின்றவனு உருத்திரபரமேசுரனை, தேவ வுணவால் வழிபடுகின்றோம். அவன், எ பிணி நீக்குற்குரியவைகளைத் தாங்கியவனாய் வந்து, சுகம், வீடு, பாது என்பவற்றை எமக்குக் கொடுத்தருள்வானாக என்பதாம்.

இருக்கு 6.

इदं पित्रे मरुतामुच्यते वचः स्वादोः स्वादीयो रुद्राय वर्द्धनम् ।

रास्वा च नो अमृत मर्तभोजनं त्मने तोकाय तनयाय मृळ ॥ ६ ॥

பதவுரை.

(இ-ள்.) मरुतां = 49, மருத்துக்கட்கு,—पित्रे = பிதாவாகிய,—रुद्राय = திர பரமேசுரனுக்கு,—स्वादो: = சுவையினும்.—स्वादीय: = மிகுந்த சுவை யதும்,—वर्द्धनं = களிப்பை யுண்டாக்குவதுமாகிய,—इदं वच: = இத் து கியத்தை,— उच्यते = சொல்லுகின்றனம்,—अमृत ! = நாசமற்றோய் !— जनं = மக்கள் உண்ணுதற்குரிய வுணவை,— रास्व = கொடுப்பாயாக.— மற்றும், என்னையும்,—न: तोकाय च = எமது புத்திரனையும்,— तनयाय = னுடைய புத்திரனையும் சுகப்படுத்துவாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

நாற்பத்தோன்பது மருத்துக்களையும், தனக்குப் புத்திரர்களாகவுடைய உருத்திர பரமேசுரனை இனிது துதிக்கின்றனம். உருத்திர! எங்கட்குவேண்டிய வுணவைக் கொடுப்பதுடன், எம்மையும், எமது புத்திரர்களையும், புத்திரர்களுடைய புத்திரர்களையும் நலம்பெறச் செய்வாயாக. என்பதாம்.

இருக்கு 7.

मा नो॑ म॒हान्त॑मु॒त मा नो॑ अर्भ॒कं मा न॒ उक्ष॑न्तमु॒त मा न॑ उक्षि॒तम् ।
मा नो॑ वधीः पि॒तरं॒ मोत मा॒तरं॑ मा नः॑ प्रि॒यास्त॒न्वो॑ रुद्र रीरिषः ॥ ७ ॥

பதவுரை.

(இ-ள்.) हेरुद्र ! = *உருத்திர பரமேசுர !*— नः = *எங்களுக்குள்,*—महान्तं = *முதியோராயுள்ளாரை,*— मावधीः = *துன்புறுத்தாதே.*— उत = *மற்றும்,* नः = *எங்களுடைய,*— अर्भकं = *குழந்தையை,*— मावधीः = *துன்புறுத்தாதே,* नः = *எங்களுக்குள்ளிருக்கும்,* —उक्षन्तं = *தருணரையும்'* —मावधीः = *துன்புறுத்தாதே.*—उत = *மற்றும்,*—नः = *எமது,*—उक्षितं = *கருப்பையிலுள்ள சிசுவையும்,* मावधीः = *துன்புறுத்தாதே.*—नः = *எமது* —पितरं = *தந்தையையுந்,*—मावधीः = *துன்புறுத்தாதே.*—उत = *மற்றும்,*—मातरं = *தாயையும்.*—मावधीः = *துன்புறுத்தாதே.*—नः = *எமது*—प्रिया:+तन्वः = *நண்பரின் குழந்தைகளையும்,*—मा रीरिषः = *துன்புறுத்தாதே.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! எம்மைச்சேர்ந்த, பாலர், தருணர், சிசு, மாதா, பிதா, நண்பர் முதலானோர்களைத் துன்புறுத்தாதருள்வாயாக. என்பதாம்.

இருக்கு 8.

मा न॑स्तो॒के तन॑ये॒ मा न॒ आयौ॒ मा नो॒ गोषु॒ मा नो॒ अश्वे॑षु रीरिषः ।
वी॒रान्मा नो॑ रुद्र भामि॒तो व॑धीर्ह॒विष्म॑न्तः॒ सद॒मित्त्वा॑ हवामहे ॥ ८ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र ! = *உருத்திர பரமேசுர !* — नः = *எமது,*— तोके = *புத்திரனுக்கு,*— मा रीरिषः = *துன்பை யுண்டாக்காதே.*— तनये = *பௌத்திரனுக்கும்,* (मा रीरिषः) = *துன்பை விளைவியாதே.*— नः आयौ = *எமது மனிதரிடத்தும் (மனிதர் கட்கும்,)*— (मा रीरिषः) = *துன்பைத் தோற்றுவியாதே.*— नः गोषु = *எமது*

பசுக்கட்கும்,—(मा रीरिषः) = *துன்பைச் செய்யாதே.*—नः अश्वेषु = *எமது குதிரை கட்கும்,*— मा रीरिषः = *துன்பை யுண்டாக்காதே.*—नः = *எமது,*—वीरान् = *வீரர்களை,*— भामितः = *முனிவுகொண்டு,*— मावधीः = *துன்புறுத்தாதே.*— हविष्मन्तः = *யாம், அவிகளைக் கைக்கொண்டவர்களாய்,*— सदं इत् = *எப்போதும்,* त्वा = *நின்னை,*— हवामहे = *அழைக்கின்றேம்.* எ-று.

ஈண்டு, ஏழாம்வேற்றுமைகள் நான்காம்வேற்றுமைப் பொருளில் நின்றன.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுரன், எமது புத்திர பௌத்திரர்களையும், கோக்கள் குதிரைகளையுந் துன்புறுத்தாதருள்வானாக. மற்றும், எமது மனிதர்களையும், வீரர்களையுந் துன்புறுத்தாதவனாகுக. அவிகளைக் கைக்கொண்டவர்களாய் எப்போதும் உருத்திர பரமேசுரனை யாமும் அழைக்கின்றவர்களாவோமாக என்பதாம்.

இருக்கு 9.

उप॑ ते॒ स्तोमा॑न्पशु॒पा इ॒वाक॑रं॒ रास्वा॑ पितर्मरुतां सु॒म्नम॒स्मे ।
भ॒द्रा हि ते॑ सुम॒तिर्मृ॑ळ॒यत्त॒माथा॑ व॒यम॒व इत्ते॑ वृणीमहे ॥ ९ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र ! = *உருத்திரபரமேசுர !*— ते = *உனக்கு,*— स्तोमान् = *துதியாகிய மந்திரங்களை,*—पशुपाः इव = *பசுக்களைப் பாதுகாக்கின்றவரைப் போன்று,* उप आकरं = *அருகில் சமர்ப்பிக்கின்றேம்.*— मरुतांपितः ! = *மருத்துக்களுக்குப் பிதாவே !*— अस्मे = *எங்களுக்கு,*— सुम्नं = *சுகத்தைக்,*—रास्व = *கொடுத்தருள்வாயாக.*— ते = *உனது,*— सुमतिः = *அநுக்கிரகபுத்தியும்,*— मृळयत्तमा = *பெரும் நலத்தை மிகக் கொடுப்பதாம்.*—भद्रा = *ஆதலின், போற்றத்தக்கதாகிய,*—हि = *இக்காரணத்தால்,*— अथ = *பின்னர்,* —वयं = *யாம்,*— ते = *உனது,*—अवः इत् = *பாதுகாப்பையே (அருளையே),*— वृणीमहे = *வேண்டுகின்றேம்.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! யாம், உனக்குத் தோத்திர மந்திரங்களை யருப்பிக்கின்றேம். உனது அநுக்கிரகம், எமக்கு மிகுந்த சுகத்தைக் கொடுப்பதாமாதலின் அதை மிகவும் வேண்டுகின்றேம் என்பதாம்.

இருக்கு 10.

आ॒रे ते॑ गो॒घ्नमु॒त पु॑रुष॒घ्नं क्षय॑द्वीर सु॒म्नम॒स्मे ते॑ अस्तु ।
मृ॒ळा च॑ नो॒ अधि॑ च ब्रूहि दे॒वाधा॑ च नः॒ शर्म॑ यच्छ द्वि॒बर्हाः॑ ॥ १० ॥

பதவுரை.

(இ-ள்.) हे क्षयद्वीर ! = பகைவரை யடைக்கும் உருத்திர பரமேசுர ! ते = உன்னிடத்திலுள்ள,— गोघ्नं = பசுக்களைக் கொல்லத்தக்க ஆயுதங்களும், उत+पुरुषघ्नं = மற்றும், புருடர்களைக் கொல்லத்தக்க ஆயுதங்களும்,—आरे = எமக்குத் தூரமாய்ச் செல்வனவாருக.— अस्मे = எம்மிடத்து,— ते = நினது (நீ அருள்செய்யும்).— सुम्नं = சுகமானது,— अस्तु = இருக்குக.— मृळ = மற்றும், களிப்படைவாயாக.—देव ! = பிரகாசமுடைய உருத்திர ! நீ,—अस्मान् = எமக்கு, अधिब्रूहि = ஆசீர்வாதங் கூறுவாயாக.— अध च = பின்னரும்,— नः = எமக்கு, द्विबर्हा = இருவகையிலும்,— शर्म = சுகத்தை,— यच्छ = கொடுத்தருள்வாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! நீ, உன்னிடத்திலுள்ள கொடிய ஆயுதங்களை, எம்மினின்றும் நீக்கி விடுவாயாக. மற்றும், நலமருள்வாயாக. அஃதன்றியும், இனிய வசனங்களைக் கூறி யருள்வாக என்பதாம்.

இருக்கு 11.

अवोचाम नमो अस्मा अवस्यवः शृणोतु नो हवं रुद्रो मरुत्वान् ।

तन्नो मित्रो वरुणो मामहन्तामदितिः सिन्धुः पृथिवी उत द्यौः ॥ ११ ॥

பதவுரை.

(இ-ள்.) अवस्यवः = உணவுப் பொருளை, அல்லது, பாதுகாப்பை விரும்புகின்ற யாங்கள் (நினக்கு),—नमः = வணக்கம் என்னும் சொல்லை,— अवोचाम = சொல்லுகின்றோம்.— अस्मै = இவ் வுருத்திர பரமேசுரனுக்கு,— नमः = அவ் வணக்கம் உரியதாகுக.— मरुत्वान् = மருத்துக்களைப் புத்திரர்களாகவுடைய, रुद्रः = உருத்திர பரமேசுரன்,— नः = எமது,— हवं = அழைப்பை,— शृणोतु = கேட்டருள்வானாக.— तत् = எம்மாற் கூறப்பட்ட அத்தகையவைகளையும், नः = எம்முடைய சம்பந்தமானவைகள் அனைத்தையும்,— मित्रः = மித்திரன், वरुणः = வருணன் अदितिः = அதிதி,—सिन्धुः = கடல்,—पृथिवी = தரை,– उत+द्यौः = மற்றும், வான் என்னும் இவர்கள்,—मामहन्ताम् = போற்றுவார்களாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

நலத்தை வேண்டிய யாங்கள் வணக்கங் கூறுகின்றோம். எமது வணக்கம் உருத்திரனுக்கு உரித்தாகுக. மருத்துக்களுக்குப் பிதாவாகிய உருத்திர பர

மேசுரன், நாங்கள் அழைப்பதைக் கேட்டருள்வானாக. யாம் கூறுகின்றதை மித்திரன் முதலானோர்களும் போற்றிக்கொள்வார்களாக. என்பதாம்.

இருபத்தெட்டாம் வருக்கம் இரண்டாம் மண்டலம்
ஒன்பதாம் அனுவாகம் முற்றிற்று
இரண்டாவது உருத்திரம் முடிந்தது.

இரண்டாம் அஷ்டகம்

மண்டலம்—2. வருக்கம்—16. சூக்தம்—33-ல்

இருக்கு 1.

आ ते पितर्मरुतां सुम्नमेतु मा नः सूर्यस्य संदृशो युयोथाः ।
अभि नो वीरो अर्वति क्षमेत प्रजायेमहि रुद्र प्रजाभिः ॥ १ ॥

பதவுரை.

(இ-ள்.) हे मरुतांपित: ! = *மருத்துக்களைத் தோற்றுவித்த,*—रुद्र ! = *உருத்திர மகேசுரனே !*— ते+सुम्नं = *கொடுக்கத்தகுந்த உனது சுகமானது,*—आ एतु = *(எம க்கு) வருவதாகுக.*—नः = *எங்களை,*—सूर्यस्य = *இரவியின்,*—सं दृश: = *தரிசனத்தி லிருந்து,*— मा युयोथाः = *பிரித்து விடாதே.*— न: = *மற்றும், எமது,*— वीर: = *வீரமுடைய புத்திரர்,*— अर्वति = *பகைவர்களை,*— अभिक्षमेत = *நன்கு அடக்கு வார்களாக. அல்லது,*— अर्वति = *பகைவரிடத்து வீரமிக்க நீ,*— न: = *எம்மாற் செய்யப்பட்ட பிழைகளை,*— अभिक्षमेत = *பொறுத்தருள்வாயாக.*— प्रजाभि: = *யாம் புத்திர பௌத்திரர்களுடன்,*— प्रजायेमहि = *பெருகுவோமாக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

மருத்துக்களை யீன்ற உருத்திர பரமேசுர! நின்னால் அருள் செய்யத்தக்க சுகமனைத்தும் எமக்கு உண்டாகுக. எம்மிடத்து, சூரிய தரிசனம் எப்போதும் இருக்குமாறு செய்தருள்வாயாக. எமக்கு நல்ல மக்கள் உண்டாவார்களாக. அல்லது, நீ, எமது பிழைகளைப் பொறுத்தருள்வாயாக. நாங்கள் தழைத்தோங்கு வோமாக என்பதாம்.

இருக்கு 2.

त्वादत्तेभी रुद्र शंतमेभिः शतं हिमा अशीय भेषजेभिः ।
व्यस्मद्द्वेषो वितरं व्यंहो व्यमीवाश्चातयस्वा विषूचीः ॥ २ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र! = உருத்திர பரமேசுர !—त्वा = உன்னால்,—दत्तेभिः = கொடுக்கப்பெற்றவைகளும்,— शन्तमेभिः = பெரு நலத்தைக் கொடுப்பவைகளுமான, भेषजेभिः = மருந்துகளால்,— शतं हिमाः = நூறு வருடகாலம்,— अशीय = (யாம்) நிலைத்திருப்போமாக.— अस्मत् = எமது,— द्वेषः = பகைவரை,— चातयस्व = அடியோடு ஒழிப்பாயாக. अंहः = பாவங்களையும்,—वितरं विचातयस्व = முழுதும் ஒழிப்பாயாக. अमीवाः = பிணிகளையும்,—विचातयस्व = வேருடன் கெடுப்பாயாக. विषूचीः = எல்லா வுடம்புகளினும் தொடர்ந்துள்ள வியாதிகளையும்,—विचातयस्व = முற்றும் போக்கி யருள்வாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! நீ, கொடுக்கும் மருந்துகளால், நூறுவயதுவரை யாம் வாழ்வோமாக. பகைவர் ஒழிவாராக. பாவங்கள் நீங்குக. பிணிகள் போகுக. என்பதாம்.

இருக்கு 3.

श्रेष्ठो जातस्य रुद्र श्रियासि तवस्तम स्तवसां वज्रबाहो ।

पर्षिणः पारमंहसः स्वस्ति विश्वा अभीतीरपसो युयोधि ॥ ३ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र ! = உருத்திர பரமேசுர !— जातस्य = தோன்றிய உலகப்பொருள்களுள்,— श्रिया = ஐசுவரியத்தால்,— श्रेष्ठः = சிறந்தவனாக,— असि = இருக்கின்றாய்.—वज्रबाहो ! = வச்சிரமேந்திய கரத்தோய் ! நீ,—तवसां = பெரியவைகளுள்ளும்,—तवस्तमः = மிகப் பெரியவனாக,—असि = இருக்கின்றாய்.—नः = எங்களை,— अंहसः = பாவத்தினுடைய,— पारं = கரையை,— स्वस्ति पर्षि = நலத்தால் ஏறும்படி செய்தருள்வாயாக.— रपसः = பாவத்தின்,— विश्वाः अभीतीः = பிராப்திகளையும்,—युयोधि = நீக்குவாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திரபரமேசுர ! நீ, தோன்றிய உலகில், மிகச் சிறந்தோனும், பெரியோனுமாக இருக்கின்றாய். பாவங்களினின்று எம்மை நீக்கி யருள்வாயாக என்பதாம்.

இருக்கு 4.

मा त्वा रुद्र चुक्रुधामा नमोभिर्मा दुष्टुती वृषभ मा सहूती ।

उन्नो वीराँ अर्पय भेषजेभिर्भिषक्तमं त्वा भिषजां शृणोमि ॥ ४ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र ! = உருத்திரபரமேசுர !— त्वा = உனக்கு,— नमोभिः = மாறுகிய வணக்கங்களால்,—माचुक्रुधाम = முனிவை யுண்டாக்கேன்.— दुस्तुती = நலமிலாத் துதியாலும்,— (माचुक्रुधाम) = முனிவையுண்டாக்கேன்.— सहूती = ஏனைய சிறிய தேவர்களுடன் உன்னை அழைப்பதாலும்,— (माचुक्रुधाम = உனக்கு முனிவை யுண்டாக்கேன்).— नः = எங்களுடைய,— वीरान् = புத்திரர்களை,— भेषजेभिः = நினது மருந்துகளால்,—उत् अर्पय = மேம்பாட்டை யடையுமாறு செய்தருள்வா யாக. त्वा = உன்னை,— भिषजां = வைத்தியர்களுக்குள்,— भिषक्तमं = மிகச்சிறந்த வைத்தியனென்று சொல்வதை,—शृणोमि = (யான்) கேட்கின்றேன். எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திரபரமேசுர! உன்னை, மாறுபட்டு வணங்குவதாலும், சிறிய தேவர்களுடன் அழைப்பதாலும் கோபத்தை யுண்டாக்கமாட்டோம். வைத்தியர்களுள், சிறந்த வைத்தியன் நீ யென்று கேட்கப்படுகிறபடியால், நினது மருந்தால் எமது புத்திரர்களை நலமுறச் செய்தருள்வாயாக என்பதாம்.

இருக்கு 5.

हवीमभिर्हवते यो हविर्भिरव स्तोमेभी रुद्रं दिषीय ।

ऋदूदरः सुहवो मानो अस्यै बभ्रुः सुशिप्रो रीरधन्मनायै ॥ ५ ॥

பதவுரை.

(இ-ள்.) यः = யாதொரு உருத்திர பரமேசுரன்,— हविर्भिः = அவிகளோடு கூடி—हवीमभिः = அழைத்தற்குரிய துதிகளால்,—हवते = அழைக்கப் பெறுகின் றனனோ,— (तं) रुद्रं = அவ் வுருத்திரனுக்குச் செய்யும்,— स्तोमेभिः = தோத்தி ரங்களால்,— अवदिषीय = முனிவைப் போக்குகின்றோம்.— ऋदूदरः = சிறிய வயிற்றையுடையவனும்,— सुहवः = இனிது அழைக்கத்தக்கோனும்,— बभ्रुः = அனைத்தையும் வலியுறுத்துகின்றவனும்,—सुशिप्रः = அழகிய முகத்தை யுடைய வனுமாகிய அவ் வுருத்திரன்,— नः = எமது,— अस्यै+मनायै = இப் புத்தியை, मारीरधत् = கெடுக்காதவனுகுக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

தேவ வுணவுடன், தோத்திரங்களால் அழைத்ததற்குரிய உருத்திரபரமேசுரனை, இனிய தோத்திரங்களால் சாந்தப்படுத்துகின்றோம். சிறியவயிற்றையும், அழகிய முகத்தையும் உடைய அவன், இத்தகைய எனது புத்தியைக் கெடுக்கற்க என்பதாம்.

இருக்கு 6.

उन्मा ममन्द वृषभो मरुत्वान् त्वक्षीयसा वयसा नाधमानम् ।

घृणीव च्छायामरपा अशीया विवासेयं रुद्रस्य सुम्नम् ॥ ६ ॥

பதவுரை.

(இ-ள்.) वृषभः = *விரும்பியவற்றை யளிக்கின்றவனும்,*— मरुत्वान् = *மருத்துக்களென்னும் புத்திரர்களுடன் கூடியவனுமாகிய உருத்திர பரமேசுரன்,* नाधमानं+मा = *வேண்டுகின்ற என்னை,*— त्वक्षीयसा = *இனிமையாகிய (நல்ல)* वयसा = *அன்னத்தால் (உணவுப் பொருள்களால்)*— उत्+ममन्द = *மிகக் களிப்படைவித் தருள்வானாக. (மற்றும்)*— घृणी = *வெயிற்பட்டவன்*— छायां इव = *நிழலை யடைவதுபோல்,*— रुद्रस्य = *உருத்திர பரமேசுரனுடைய,*— सुम्नं = *இன்பத்தை,*— अरपाः = *அடையாதவனாகிய யான்,*— अशीय = *அதை, அடைவதன் பொருட்டும்,*— आ विवसेयम् = *பணிசெய்கின்றேன்.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

வேண்டியவற்றை யளித்தருளும் உருத்திரபரமேசுரன், நல்ல வுணவுப் பொருள்களைக் கொடுத்து என்னைக் களிப்புறச்செய்தருள்வானாக. உருத்திரனது இன்பத்தை யடையாதவனாகிய யான், அதை யடைவதற்குப் பணி செய்து கிடக்கின்றேன் என்பதாம்.

இருக்கு 7.

क्व१ स्यते रुद्र मृळयाकुर्हस्तो यो अस्ति भेषजो जलाषः ।

अपभर्ता रपसो दैव्यस्याभीनुमा वृषभ चक्षमीथाः ॥ ७ ॥

பதவுரை.

(இ-ள்.) (हे) रुद्र ! = *உருத்திர பரமேசுர !*— ते = *உனது,*— मृळयाकुः = *இன்பை யளிப்பதாய்,*— स्यः = *இருக்கும்,*— हस्तः = *திருக்கரமானது,*— क्व = *எங்கே?* यः = *யாதொரு,*— हस्तः = *திருக்கரம்,*— भेषजः = *மருந்தைச் செய்கின்றதும்,* जलाषः = *இன்பை யளிக்கின்றதுமாமோ,*— अस्ति = *அக் கை இருக்கின்றதன்றோ, அதனால், என்னைப் பாதுகாப்பாயாக.*— वृषभ ! = *வேண்டியவற்றை யளிப்போய் ! நீ*— दैव्यस्य = *தெய்வத்தின் சம்பந்தமாய் வரும்,*— रपसः = *பாவத்தை,*— अपभर्ता = *நீக்குவோனாகி,*— मा = *எனது பிழைகளை,*— नु = *விரைவில்,*— अभि चक्षमीथाः *பொறுத்தருள்வாயாக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திரபரமேசுர! அனைவருக்கும் இன்பை யளித்தருளும், உனது திருக்கரத்தால் என்னைப் பாதுகாத்தருள்வாயாக. மற்றும், எனது பாவத்தைப் போக்கி, எனது பிழைகளையும் பொறுத்தருள்வாயாக என்பதாம்.

இருக்கு 8.

प्र ब॒भ्रवे॑ वृष॒भाय॑ श्विती॒चे म॒हो म॒हीं सु॑ष्टु॒तिमी॑रयामि ।
न॒म॒स्या क॑ल्मली॒किनं॒ नमो॑भिर्गृणी॒मसि॑ त्वे॒षं रु॒द्रस्य॒ नाम॑ ॥ ८ ॥

பதவுரை.

(இ-ள்.) बभ्रवे = உலகைப் பரிபாலிப்போனும், அல்லது, பொன்னிறமுடையோனும்,— वृषभाय = விரும்பியவற்றை யளிப்போனும், அல்லது, இடபம் போல் வலிய செய்கையை யுடையோனும்,— श्वितीचे = கர்ப்பூர நிறமுடையோனுமாகிய உருத்திர பரமேசுரன்பொருட்டு,— महः = பெரிதினும்,—महीं = பெரிதும்,— सुष्टुतिं = அழகியதுமாகிய துதியை,—प्र ईरयामि = இனிது சொல்லுகின்றேன். துதியாளா! நீயும்,—कल्मलीकिनं = இருளை யகற்றுதற்குரிய வொளியை யுடைய உருத்திரனை,— नमोभिः = வணக்கங்களால், அல்லது, அவிகளால், नमस्य = ஆராதிப்பாயாக. (யாமும்)—रुद्रस्य = உருத்திர பரமேசுரனது,—त्वेषं = கீர்த்திமலிந்த,— नाम = திருநாமத்தை, गृणीमसि = கூறுகின்றேம். எ-று.

சாயணபாடியக் கருத்து.

உலகனைத்தையும் பரிபாலிப்போனும், வேண்டியவற்றை யளித்தருள்வோனும், மிக்க வெண்மை நிறமுடையோனுமாகிய உருத்திரபரமேசுரனை, அழகிய நற்றுதிகளாற்றுதிக்கின்றேம். அவனுடைய திருநாமத்தையுஞ் சொல்லுகின்றேம். துதிப்போய்! நீயும், வணக்கத்தால், அல்லது, தேவவுணவால், அவ்வுருத்திரனையே ஆராதிப்பாயாக என்பதாம்.

இருக்கு 9.

स्थि॒रेभि॒रङ्गैः॑ पुरु॒रूप॑ उ॒ग्रो ब॒भ्रुः शु॒क्रेभिः॑ पिपिशे॒ हिर॑ण्यैः ।
ईशा॑नाद॒स्य भुव॑नस्य॒ भूरे॒र्न वा उ॑ योषद्रु॒द्राद॑सु॒र्य॑म् ॥ ९ ॥

பதவுரை.

(இ-ள்.) स्थिरेभिः = வன்மையையுடைய,—अङ्गैः = அவயவங்களுடன் கூடியவனும்,— पुरुरूपः = பல்வகை வடிவங்களை யுடையவனும்,— उग्रः = பேரொளி

யை யுடையவனும்,— बभ्रुः = *பரிபாலிப்பவனுமாகிய உருத்திர பரமேசுரன்,* शुक्रेभिः = *அழகுமலிந்த,*— हिरण्यैः = *பொன் அணிகளால்,*— पिपिशे = *இனிது விளங்குகின்றான்.*— अस्य भुवनस्य = *இவ் வுலகை,*— भूरेः = *பரிபாலிக்கின்ற'* ईशानात् रुद्रात् = *பரமேசுரனாகிய அவ் வுருத்திரனினின்று,*—असुर्यं = *அவனது பேராற்றலானது,*— न वै उयोषत् = *வேறாகாது.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

எல்லாம் வல்ல உருத்திர பரமேசுரனுடைய பேராற்றலே, ஏனைய ஆற்றல்களுமாம் என்க. சத்தியானது சத்தனைத் தவிர்த்து வேறாகாது எனினும் அமையும் என்பதாம்.

இருக்கு 10.

अर्हन्बिभर्षि सायकानि धन्वार्हन्निष्कं यजतं विश्वरूपम् ।
अर्हन्निदं दयसे विश्वमभ्वं नवा ओजीयो रुद्र त्वदस्ति ॥ १० ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र ! = *உருத்திரபரமேசுர! நீ,*— अर्हन् = *தாங்க, உரியோனாகவேயிருந்து,*— सायकानि = *அம்புகளையும்,*— धन्व *வில்லையும்,*— बिभर्षि = *தாங்குகின்றனை. (அவ்வாறே),*— अर्हन् = *தக்கோனாயிருந்தே,*— यजतं = *போற்றத்தக்கதும்,*— निष्कं = *மங்களகரமுமாகிய,*— विश्वरूपं बिभर्षि = *பல்வகை வடிவைத் தாங்குகின்றனை. (அங்ஙனமே),*— अर्हन् = *உரியவனாகவேயிருந்து,*— अभ्वं = *பெரிய,*— इदं विश्वं = *இவ் விருவகை யுலகையும்,*— दयसे = *பாதுகாக்கின்றனை.*— त्वत् = *உனைத் தவிர்த்து,*— ओजीयः = *வல்லவன்,*— नवै अस्ति = *ஒருவனும் இலன்.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திரபரமேசுர! நீ, எல்லாஞ் செய்வதற்கு உரியோனாதலின், உலகனைத்தையும் அடக்கி ஆளுகின்றனை. உனையன்றி ஒருவரும் வல்லுநர் இலர். ஆதலின் நீயே முத்தொழிற்குரியான் என்பதாம்.

இருக்கு 11.

स्तुहि श्रुतं गर्तसदं युवानं मृगं न भीममुपहत्नुमुग्रम् ।
मृळा जरित्रे रुद्र स्तवानोऽन्यं ते अस्मन्निवपन्तु सेनाः ॥ ११ ॥

பதவுரை.

(இ-ள்.) (हे स्तोतः = *துதிப்போய்! நீயும்*),— गर्तसदं = *சுரங்கத்தில் வாழ்கின்றதும்,*—युवानं = *கட்டிளமையுடையது மாகிய,*— मृगं न = *சிங்கத்தைப்*

போன்று,—भीमं = பயங்கரமானவனும்,— उपहत्नुं = பகைவரைக் கொல்லுகின்றவனும்,— श्रुतं = கீர்த்தியுடையவனும்,— उग्रं = உக்கிரத்தை யுடையவனுமாகிய, रुद्रं = உருத்திர பரமேசுரனை,— स्तुहि = துதிப்பாயாக.— रुद्र! = உருத்திர பரமேசுர! நீ,— स्तवानः = எம்மாற் போற்றப்பெற்றவனு யிருந்து,— जरित्रे = துதிக்கும் எனக்கு,— मृळ = சுகத்தைக் கொடுத்தருள்வாயாக.— ते = உனது, सेनाः = சைன்யங்கள்,— अस्मत् = எம்மினின்றும்,— अन्यं = வேறாகியவனை, निवपन्तु = கொல்லுவன வாகுக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

சிங்கம் போன்று பயங்கரமுடையவனும், பகைவரைக் கோல்லுகின்றவனு மாகிய உருத்திர பரமேசுரனை, துதியாள! நீயும் துதிப்பாயாக. உருத்திர பரமேசுர! நீ, எம்மாற் றுதிக்கப்பேற்று, எமக்குக் களிப்படைவித் தருள்வாயாக. நினது சேனையானது, என்னில் வேறுயவனை யழிப்பதாகுக என்பதாம்.

இருக்த 12.

कुमारश्चित्पितरं वन्दमानं प्रति नानाम रुद्रोपयन्तम् ।

भूरेर्दातारं सत्पतिं गृणीषे स्तुतस्त्वं भेषजा रास्यस्मे ॥ १२ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र! = உருத்திர பரமேசுர!— वन्दमानं = வாழ்த்துகின்ற, पितरं = பிதாவை,— कुमारः चित् = குமாரன் அடைவது போன்றே,— उपयन्तं = என்பால் வருகின்ற,— त्वं = உன்னை.— प्रतिननाम = வணங்குகின்றேன். (மற்றும்), भूरेः = மிகுதியாக,— दातारं = தனத்தைக் கொடுக்கின்றவனும்,— सत्पतिं = நல்லாரைப் பாதுகாக்கின்றவனு மாகிய வுன்னை,— गृणीषे = துதிக்கின்றேன். स्तुतः त्वं = துதிக்கப்பெற்ற நீ,— अस्मे = எனக்கு,— भेषजानि = மருந்துகளை, रासि = அளித்தருள்வாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

நீ, நிறைந்த ஆயுளையுடையவனுகுதி; என்று வாழ்த்தும் தந்தையை, மகன் இனிது அடைவது போன்று, என்னிடம் அன்போடு எழுந்தருளும் உருத்திர பரமேசுர! உன்னைப் பலவாறுகத் துதிக்கின்றேன். எனக்கு மருந்து முதலியவைகளை யருள்செய்வாயாக என்பதாம்.

இருக்த 13.

यावो भेषजा मरुतः शुचीनि या शंतमा वृषणो या मयोभु ।

यानि मनुरवृणीता पितानस्ताशं च योश्च रुद्रस्य वश्मि ॥ १३ ॥

பதவுரை.

(இ-ள்.) हे मरुत: = மருத்துக்களே !— वृषण: ! = வேண்டியவற்றை அளிப்போர்காள் !— व: = உங்களிடத்து,— या = எவைகள்,— शुचीनि = சுத்தமானவைகளும்,—शंतमा = பெருங்களிப்பைக் கொடுக்கின்றவைகளும்,—मयोभु = இன்பத்தை யுண்டாக்குதற் குரியவைகளும்,—न: = எம்மைப்,— पिता मनु: = பரிபாலிக்கின்ற மந்திரங்களும்,—अवृणीत = உங்களை மறைத்து நிற்பவைகளுமாயுள்ள, यानि भेषजा: = மருந்துகளுண்டோ ?— ता = அவைகளையும்,— रुद्रस्य = உருத்திர பரமேசுரனது,— शं, च, यो: च = பிணிக ளடங்குவதையும் நீங்குவதையும், वश्मि = விரும்புகின்றனன். எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திரனுடைய புத்திரர்களான மருத்துக்களிடத்திலுள்ள, எனக்கு ஆரோக்கிய காரணங்களான மருந்துகளையும் விரும்புகின்றேன். உருத்திர பரமேசுரன், எனது பிணிகளை அடக்கவேண்டும், நீக்கவேண்டும் என்பதையும் யான் விரும்புகின்றேன் என்பதாம்.

இருக்கு 14.

परिणो हेती रुद्रस्य वृज्याः परित्वेषस्य दुर्मतिर्महीगात् ।

अवस्थिरा मघवद्भ्यस्तनुष्व मीढ्वस्तोकाय तनयाय मृळ ॥ १४ ॥

பதவுரை.

(இ-ள்.) रुद्रस्य = உருத்திர பரமேசுரனுடைய.— हेति: = ஆயுதங்கள், न: = எம்மை,— परिवृज्या: = விட்டு விடுவனவாகுக.— त्वेषस्य = பிரகாசமாகிய உருத்திரனுடைய,—मही = பெரிய,—दु: मति: = துன்பத்தைக் கொடுக்கும் நிக்கிரக புத்தியானது,—अवगात् = எம்மைத் தவிர்த்து புறம்பே செல்லுக.— हे मीढ्व ! = விரும்பியவைகளைப் பொழிவோய் ! (உன்னுடைய)— स्थिरा = உறுதியான அம்புகளை,—मघ वद्भ्य: = தேவ வுணவையுடைய வேள்வித் தலைவர்களை முன்னிட்டு,— अव तनुष्व = நாணேற்றாதனவாகச் செய்வாயாக.— स्तोकाय = (அவ்வாறே எமது) புத்திரனுக்கும்,— तनयाय = பௌத்திரனுக்கும்,— मृळ = நலஞ் செய்தருள்வாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! உனது, வில் முதலான ஆயுதங்களை எங்களிடத்துச் செலுத்தாதருள்வாயாக. வேள்வித் தலைவர்களிடத்தும் அப் பாணங்களை விடாதருள்வாயாக. எமது புத்திர பௌத்திரர்கட்கும் இன்பை யளித்தருள்வாயாக என்பதாம்.

இருக்கு 15.

एवा बभ्रो वृषभ चेकितान यथा देव न हृणीषे न हंसि ।
हवनश्रुन्नो रुद्रेहबोधि बृहद्वदेम विदथे सुवीराः ॥ १५ ॥

பதவுரை.

(இ-ள்.) बभ्रो ! = உலகைப் பாதுகாப்போய் ! அல்லது, பொன்னிறத்தோய் !— वृषभ ! = வேண்டியவற்றைப் பொழிவோய் !— चेकितान ! = அனைத்தையு முணர்வோய் !—देव !—பிரகாச முடையோய் !—रुद्र ! = உருத்திர பரமேசுர ! நீ— यथा न हृणीषे = எவ்வாறு முனிவுறுதிருப்பையோ,— न हंसि = மற்றும், துன்புறுத்தமாட்டாயோ,— एव = அவ்வாறு,— (हे रुद्र !) हवनश्रुत् = யாம் அழைப்பதைக் கேட்போனுயிருந்து, इह = ஈண்டு,— नः = எங்கட்கு,—बोधि = அறிவுறுத் தருள்வாயாக. विदथे = வேள்வியில்,— सुवीराः = நற்புத்திரர்களையுடையவர்களாய்,— बृहत् = மகத்தாகிய நினது துதியை,— वदेम = சொல்லுகின்றோம். எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர ! நீ, எவ்வாற்றால், முனிவுறாது களிப்புறுவையோ, அவ்வாற்றை எங்கட்கு உபதேசித்தருள்வாயாக. வேள்வியில் உன்னை இனிது துதிக்கின்றோம் என்பதாம்.

மூன்றாவது வருக்கம் இரண்டாம் மண்டலம்
ஒன்பதாம் அனுவாகம் முற்றிற்று
மூன்றாவது உருத்திரம் முடிந்தது.

ஐந்தாம் அஷ்டகம்
மண்டலம்—7. வருக்கம்—13. சூக்தம்—46-ல்

இருக்கு 1.

इमा रुद्राय स्थिरधन्वने गिरः क्षिप्रेषवे देवाय स्वधाव्ने ।
अषाह्लाय सहमानाय वेधसे तिग्मायुधाय भरता शृणोतु नः ॥ १ ॥

பதவுரை.

(இ-ள்.) (हे स्तोतारः) = (துதிப்போர்களே ! நீவிர்)— स्थिरधन्वने = உறுதியாகிய வில்லை யுடையோனும் — क्षिप्रेषवे = விரைவிற் செல்லும் பாணத்தை

யுடையவனும்,— स्वधाव्ने = உணவுப் பொருள்களை யுடையவனும்,—अषाह्लाय = ஒருவராலும் அடக்க முடியாதவனும்,—सहमानाय = பகைவரை யடக்குகின்ற வனும்,— वेधसे = விதிக்கின்றவனும்,— तिग्मायुधाय = கூறிய ஆயுதங்களையுடையவனுமாகிய,—रुद्राय देवाय = உருத்திர பரமேசுரன் பொருட்டு,—इमा गिरः = இத்துதிகளை,–भरत = நிறையச் சொல்வீர்களாக.—नः = எமது துதிகளை,– श्रृणोतु = உருத்திரபரமேசுரன் கேட்டருள்வாஞக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

எமது துதியாளர்களே! நீவிர், உறுதியாகிய வில்லையும், விரைவிலோடும் அம்பையும், உணவுப் பொருளையு முடையவனும், பிறரால் அடக்கமுடியாதவனும், பகைவரை வெல்லுவோனுமாகிய உருத்திர பரமேசுரனுக்கு, இத்தகைய துதிகளை நிறையச் செய்வீர்களாக. உருத்திரபரமேசுரனும் எமது துதியைக் கேட்டருள்வாஞக என்பதாம்.

இருக்கு 2.

स हि क्षयेण क्षम्यस्य जन्मनः साम्राज्येन दिव्यस्य चेतति ।
अवन्नवन्तीरुपनो दुरश्चरानमीवो रुद्र जासु नो भव ॥ २ ॥

பதவுரை.

(இ-ள்.) सः हि = உண்மையில், அவ் வுருத்திர பரமேசுரன்,— क्षम्यस्य जन्मनः = மண்ணிலுதித்தவைகளை,–क्षयेण = ஐசுவரியத்துடன் கூடவே,–चेतति = உணர்கின்றனன்.— दिव्यस्य = விண்ணிலுதித்தவைகளையும்,— साम्राज्येन = பாக்கிய இலக்குமியுடன் கூடவே,—चेतति = உணர்கின்றான். (இனிப் பிரத்தியட்சம்)— रुद्र! = உருத்திர பரமேசுர! நீயும்— अवन्तीः = துதிக்கின்ற,— नः = எங்களைப்,— अवन् = பரிபாலித்து,— दुरः = எமது இல்லிற்கும்,—उपचर = வந்தருள்வாயாக.—नः = மற்றும், எமது,–जासु = மக் (களுக்குள்) களை,–अनमीवः = பிணியிலாதவர்களாக,—भव = செய்வோஞகுதி. எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுரன், உண்மையில் மண்ணிலுண்டான மக்களை ஐசுவரிய முடையவர்களாகவும், விண்ணிலுண்டானவர்களைச் சாம்பிராச்சிய முடையவர்களாகவும் எண்ணி யருள்கின்றனன். (நேரிற் கூறல்) உருத்திர பரமேசுர! எமது மக்களைப் பிணியிலாதவர்களாகச் செய்வதுடன் எமது வீட்டிற்கும் வந்தருள்வாயாக என்பதாம்.

இருக்கு 3.

या ते॒ दि॒द्युदव॑सृष्टा दि॒वस्परि॑ क्ष्म॒या चर॑ति॒ परि॒ सा वृ॑णक्तु नः ।

स॒हस्रं॑ ते स्वपिवात भेषजा॒मा न॑स्तो॒केषु॒ तन॑येषु रीरिषः ॥ ३ ॥

பதவுரை.

(இ-ள்.) (हे रुद्र: !) = (உருத்திர பரமேசுர !)—ते = உனது சம்பந்தமாய், दिवस्परि = வானிலிருந்து,—अवसृष्टा = விழ்த்தப்பட்டதாய்,—क्ष्मया = மண்ணுடன் கூடி,—चरति = இருக்கின்ற,—या दिद्युत् = யாதொரு இடியுண்டோ,—सा = அது, नः = எங்களை,— परिवृणक्तु = நீக்கிவிடுவதாகுக. (மற்றும்)— स्वपिवात ! = இனிது போற்றத்தக்கோய் !— ते = உனது,— सहस्रं = ஆயிரக்கணக்கான,— भेषजा = மருந்துகளை,—नः = எமக்கு அளித்தருள்வாயாக.—तोकेषु = (எமது) புத்திரர்களிடத்தும்,— तनयेषु = பௌத்திரர்களிடத்தும்,— मारीरिषः = துன்பத்தைச் செய்யாதருள்வாயாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

மின்னல் வடிவாகிய உருத்திர பரமேசுர! உனது சம்பந்தமாய் வானிலிருந்து விழுகின்ற இடியானது எம்பாற் படாது அகலுக. நினது மருந்துவகைகளை எமக் களித்தருள்வாயாக. எமது புத்திர பௌத்திரர்களைத் துன்புறுத்தாதருள்வாயாக என்பதாம்.

இருக்கு 4.

मा नो॑ वधी रुद्र॒ मा परा॑ दा॒ मा ते॑ भूम॒ प्रसि॑तौ ही॒ळितस्य॑ ।

आ नो॑ भज ब॒र्हिषि॑ जीवशं॒से यू॒यं पा॑त स्व॒स्तिभिः॒ सदा॑ नः ॥ ४ ॥

பதவுரை.

(இ-ள்.) हे रुद्र ! = உருத்திர பரமேசுர !— नः = எம்மை,— मा वधीः = துன்புறுத்தாதருள்வாயாக,—मा परा दाः = மற்றும், குறைவு படுத்தாதே. (மற்றும்) हीळितस्य = முனிவுற்ற,—ते = உனது,—प्रसितौ = வலியகட்டுப்பாட்டில்,—मा भूम = யாம் சிக்கிக்கொள்ளாதவராவோமாக. (மற்றும்)— जीवशंसे = சீவர்களாற் போற்றுகின்ற,— बर्हिषि = வேள்வியில்,— नः = எம்மை,— आभज = (நின்னை வழிபடுவோராகச் செய்தருள்வாயாக.—यूयं = உருத்திரன் முதலான தேவர்களே ! நீவிர்,—नः = எங்களை,—स्वस्तिभिः = மங்களத்துடன்,—सदा पात = எப்போதும் பாதுகாத்தருள்வீர்களாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

உருத்திர பரமேசுர! நீ, எம்மைத் துன்புறுத்தாதருள்வாயாக. இழிவு படுத்தாமலும் அருள்வாயாக, மற்றும், உனது பந்தத்துள், யாம் கட்டுப்படாதவர்களாவோமாக. போற்றற்குரிய வேள்வியில், எம்மை வழிபாடுடையவர்களாகச் செய்தருள்வாயாக. எப்போதும் எங்களை மங்களமாய்ப் பரிபாலித்தருள்வாயாக. என்பதாம்.

ஐந்தாம் அஷ்டகம் பதின்மூன்றும் வருக்கம்

முற்றும்.

நான்காவது உருத்திரம் முடிந்தது.

அஷ்டகம்—5. வருக்கம்—18. சூக்தம்—7-ல்

இருக்த 1.

सोमारुद्रा धारयेथामसुर्यं १ प्रवामिष्टयोरमश्नुवन्तु ।

दमेदमे सप्तरत्ना दधाना शं नो भूतं द्विपदेशं चतुष्पदे ॥ १ ॥

பதவுரை.

(இ-ள்.) हे सोमारुद्रा! = *சோமமே! உருத்திரனே! நீவிர்.*—असुर्यं = *அசுரர்களுடைய வன்மையை,*— धारयेथां = *எங்களிடத்து இருக்கச் செய்வீர்களாக.* दमे+दमे = *எமது மனைக ளனைத்திலும் உள்ள,*— इष्टय: = *வேள்விகள்,*— वां = *உங்க ளிருவரையும்,*—अरं = *பரந்து,*—प्राश्नुवन्तु = *இனிது சூழ்ந்து கொள்ளுவனவாகுக.*-सप्तरत्ना दधाना = *எழுவகை இரத்தினங்களை யணிந்துள்ள நீங்களிருவரும்,* न: = *எங்கட்கு,*— शं = *சுகத்தை,*— भूतं = *உண்டாக்குபவர்க ளாகுக.*—द्विपदे = *எமது புத்திரர் முதலானோரிடத்தும்,*—चतुष्पदे = *பசு முதலியவைகளிடத்தும்,* शं भूतं = *சுகத்தை யுண்டாக்குபவர்க ளாவீர்களாக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

சோமன், உருத்திர பரமேசுரன் இருவரும், எங்கட்கு அசுரர்களுடைய ஆற்றல் போன்ற ஆற்றலைக் கொடுப்பார்களாக. மற்றும், எமது வீடுகளிற் செய்யப்படும் வேள்விகள் அவ் விருவருக்கும் நிறைவனவாகுக. பலவகை இரத்தினங்களை யணிந்துள்ள அவர்கள் எமது புத்திரர் முதலானோருக்கும், பசு முதலியவைகளுக்கும் இன்பத்தைக் கொடுப்பார்களாக என்பதாம்.

இருக்கு 2.

सोमारुद्रा वि वृहतं विषूचीममीवा या नो गयमाविवेश ।
आरे बाधेथां निर्ऋतिं पराचैरस्मे भद्रा सौश्रवसानि सन्तु ॥ २ ॥

பதவுரை.

(இ-ள்.) हे सोमारुद्रा! = *சோமன், உருத்திரன் என்பவர்களே! நீவிர்,* नः = *எமது,*—गयं = *வீட்டை, அல்லது, வீட்டிலுள்ள மக்களை,*—या अमीवा = *யாதொரு பிணியானது,*— विषूचीं = *முழுதும் வந்து,*— आविवेश = *அடைகின்றதோ,*—वि वृहतं = *அதை, நீக்குவீர்களாக.*— निर्ऋतिं = *வறுமையை,*— पराचैः = *நீக்கும் வகைகளால்,*— आरे = *தூரத்தில்,*— बाधेथां = *வறுமையை நீக்குவீர்களாக.*— अस्मे = *எங்கட்கு,*— भद्रा = *மங்களமான,*— सौश्रवसानि = *உணவுப் பொருள்களும் கீர்த்திகளும்,*—सन्तु = *உண்டாகுக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

சோமன், உருத்திரன் என்னும் தேவர்களே! நீவிர், எங்கள் வீட்டிலுள்ள மக்கட்குப் பிணியிலாது செய்தருள்வீர்களாக. தரித்திரத்தைத் தூரத்தில் நீக்குவீர்களாக. எங்கட்கு மங்களமான உணவுப் பொருளையும் கீர்த்தியையுங் கொடுப்பீர்களாக. என்பதாம்.

இருக்கு 3.

सोमारुद्रा युवमेतान्यस्मे विश्वा तनूषु भेषजानि धत्तम् ।
अव स्यतं मुञ्चतं यन्नो अस्ति तनूषु बद्धं कृतमेनो अस्मत् ॥ ३ ॥

பதவுரை.

(இ-ள்.) हे सोमारुद्रा! = *சோமன் உருத்திரன் என்பவர்காள்!*— युवं = *நீவிர்,*—विश्वा एतानि भेषजानि = *வெளிப்படையான இம் மருந்துகளனைத்தையும்,* अस्मे = *எமது,*—तनूषु = *உடம்புகளில்,*— धत्तं = *ஏறச்செய்வீர்களாக.*— नः = *மற்றும், எமது,*—तनूषु = *உடம்புகளில்,*—कृतं = *எம்மாற் செய்யப்பட்ட,*—यत् एनः अस्ति = *யாதொரு பாவம் உண்டோ, அதையும்,*— बद्धं = *பந்தத்தையும்,* अवस्यतं = *போக்குவீர்களாக.* (*அதாவது*)— अस्मत् = *எம்மிலிருந்து,*— मुञ्चतं = *நீக்கிவிடுவீர்களாக.* எ-று.

சாயணபாடியக் கருத்து.

சோமன். உருத்திரன் என்பவர்காள்! நீவிர், எமது உடம்பிற்குள் மருந்துகளைப் புகட்டுவீர்களாக. எம்மாற் செய்யப்பட்ட பாவங்களையும், பந்தங்களையும் குறைத்தும், நீக்கியும் விடுவிப்பீர்களாக என்பதாம்.

இருக்கு 4.

तिग्मायुधौ तिग्महेती सुशेवौ सोमारुद्राविह सुमृळतं नः ।

प्रनोमुञ्चतं वरुणस्यपाशाद्गोपायतं नः सुमनस्यमाना ॥ ४ ॥

பதவுரை.

(இ-ள்.) हे सोमारुद्रौ ! = சோம, உருத்திரர்களே ! நீவிர்,—तिग्मायुधौ = கூர்மை யானவில்லையுடையவர்களும்,— तिग्महेती = கூரிய பாணத்தை யுடையவர்களும், सुशेवौ = நன்கு சுகத்தைக் கொடுக்கின்றவர்களும்,— सु+मनस्यमाना = நல்ல மனத்தை யுடையவர்களும், அல்லது, துதிக்கப்பெற்றவர்களும், அல்லது, துதியை விரும்புகின்றவர்களுமாயிருந்து,— इह = இவ்வுலகில்,— नः = எங்களை,—सु = நன்கு,—मृळतं = இன்புறச் செய்வீர்களாக.—नः = மற்றும், எங்களை,— वरुणस्य पाशात् = வருணபாசத்திலிருந்து,— प्रमुञ्चतं = விடுவிப்பீர்களாக.— नः = மற்றும், எங்களை,—गोपायतं ஆபத்தினின்றும் பாதுகாப்பீர்களாக. எ-று.

சாயணபாடியக் கருத்து.

சோம, உருத்திரர்களே ! நீவிர், கூரிய வில்லையும் அம்பையு முடையவர் களும், நன் மனத்தவர்களுமாயிருந்து, எமக்குச் சுகத்தைச் செய்வீர்களாக. ஆபத்துக்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்தருள்வீர்களாக என்பதாம்.

ஐந்தாம் அஷ்டகத்தில் 18-ம் வருக்கம்
நான்காம் மந்திரம் முற்றும்.

இருக்கு வேதத்திலுள்ள ஐந்து உருத்திரங்களும் அதன் உரையும்
முடிந்தன.

உருத்திர பரமேசுராய நமஃ.
சுப்ரமண்யோம்.

ஏவரெடி பிரஸ், சூளை, சென்னை.